# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 942/SCIC/2020**

திரு.வெ.ந.மணிவாசகம், த/பெ.நடராஜன்
44, வெள்ளாளர் தெரு — புகார்தாரர்
மானாமதுரை
சிவகங்கை மாவட்டம் - 630 606.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
மானாமதுரை
சிவகங்கை மாவட்டம் - 630 606.

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 11/03/2024 அன்று ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **மனுதாரரின் 05/11/2020 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்க 18/11/2020 தேதியிட்டு தவறான தகவல்களை வழங்கியதற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.சி.ஆதிலெட்சுமி, சார்பதிவாளர், மானாமதுரை அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன திருமதி.சி.ஆதிலெட்சுமி அவர்களின் விளக்கத்தினை அவரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**2. மேற்குறிப்பிட்டவாறு திருமதி.சி.ஆதிலெட்சுமி, முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், மானாமதுரை அவர்கள் 08/06/2024 தேதியிட்டு தனது காரண விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்துள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"புகார் மனுதாரர் திரு.மணிவாசகம் என்பவரின் தாயார் தமிழரசி என்பவரால் 08.12.2018-ல் ஒரு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சுமார் 1 ஆண்டிற்குப் பின்பே மேற்படி அலுவலகத்தில் பணியில் சேர்ந்த விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலையில் சிவகங்கை மாவட்டப் பதிவாளர் அவர்கள் ஆணை எண்.3226/இ1/2019 நாள் 27/11/2019 தேதிய கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் திருமதி.தமிழரசி என்பவரால் தான் பதிவு செய்யப்பட்ட ஆவணத்திற்கு பின் மானாமதுரை சார்பதிவக வில்லங்க சான்றில் சம்பந்தமில்லாத பதிவுகள் நிரம்ப உள்ளதாகவும் அவற்றை நீக்கம் செய்து தருமாறும் கோரி கடிதம் பெற்றுள்ளதாகவும் அதன் மீது நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு பதில் அளித்து அதன் விவரம் தெரிவிக்குமாறு பதிவாளர்களால் கோரப்பட்டுள்ளது.

எனவே, இவ்வலுவலக பதிவுகளை ஆய்வு செய்ததில் அதில் சம்பந்தம் இல்லாத பதிவுகள் ஏதும் இல்லை. எனவே, நீக்கம்செய்ய வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. இவ்விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு மாவட்டப் பதிவாளர் அவர்களுக்கும் பதில் விவரம் அனுப்பப்பட்டது.

பதில் விவரம் தெரிந்த பின்னீடு மனுதாரரால் இவ்விவரம் 08.12.2018-ல் தன்னால் விவரம் கோரப்பட்டது என்றும் அதற்க நாளது வரை பதில் பெறப்படவில்லை எனவும் பதில் அளிக்காத சார்பதிவாளர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் என்ன என்றும் அந்த கடிதங்களின் ந.க.எண்.விவரங்களும் கோரப்பட்டது.

சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் யார் என்ற விவரம், கடைசி வரை மனுதாரரால் தெரிவிக்கப்படவே இல்லை. நேரில் விசாரணைக்கு அழைத்த போதும் நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்கவில்லை. இருப்பினும், மனுதாரர் அனுப்பிய ஒப்புகை ரசீதில் உள்ள கையொப்பத்தின் மூலம் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அடையாளம் காணப்பட்டு சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அப்போதைக்கு மானாமதுரை சார்பதிவகத்திலேயே உதவியாளராக பணிபுரிந்ததால் மேற்படியாரிடம் விவரம் கோரியதில் சம்பந்தப்பட்ட மனுவிற்கு பதில் அனுப்பப்பட்டுவிட்டது என்றும் புகார் மனு தொடர்பான கடிதம் ஓராண்டு முடிவுக்கட்டில் வைக்கப்பட்டுள்ளதால் தற்சமயம் வழங்க இயலவில்லை என தெரிவிக்கப்பட்டது. புகார் மனுவோ, பதில் அளிக்கப்பட்ட ந.க.எண்.விவரமோ என்னிடம் வழங்கப்படாததால் ந.க.எண்.விவரம் தெரிவிக்க இயலவில்லை.

இருப்பினும் சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பி தங்களால் கோரியதாக சொல்லப்படும் வில்லங்க சான்றின் சம்பந்தமில்லாத பதிவுகள் குறித்த விவரம் அனைத்தும் நேரில் பதிவுகளை காண்பித்து விளக்கப்பட்டது.

மனுதாரரும் அவற்றை தெரிந்து கொண்டு இன்று ஆஜராகினேன். சம்மந்தமில்லாத பதிவு குறித்த விவரம் அளிக்கப்பட்டது என கடிதம் என்னிடம் வழங்கிவிட்டு சென்று விட்டார்.

பின் மீண்டும் சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரமும், மாவட்ட ஆட்சியர், மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பிய கடிதங்களின் ந.க.விவரமும் நாள் விவரமும் கோரப்பட்டது.

மனுதாரர் ஒருவர் தான் அனுப்பி மனுவிற்கு 30 நாட்களுக்குள் பதில் பெறவில்லை என்றாலோ பெறப்பட்ட பதில் திருப்தி இல்லை என்றாலோ மேற்முறையீட்டு அலுவலரிடமே கோரிப் பெற இயலும் மேல்முறையீட்டு அதிகாரியே நடவடிக்கை எடுக்க இயலும். ஒரு சார்பதிவாளரே மற்றொரு சார்பதிவாளர் மீது நடவடிக்கை எடுக்க இயலாது. இதன் காரணமாகவே சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் பதில் அனுப்பப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளதால் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து மானாமதுரை சார்பதிவகத்திற்கு நேரடியாக மனுவோ, கடிதமோ ஏதும் பெறப்படவில்லை. மாவட்டப் பதிவாளர் (நிர்) சிவகங்கை மூலமே பெறப்பட்டது. எனவே இவ்வலுவலகத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பதில் ஏதும் அனுப்பப்படவில்லை. மாவட்டப் பதிவாளர் அவர்கள் மூலமே பதில் அனுப்பப்பட்டது. மாவட்டப் பதிவாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடித எண்.விவரமே ந.க.எண்.10 ஆகும். இவ்விவரமும் மனுதாரருக்கு பிறிதொரு தபால் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நான் பணியேற்ற பின் கிடைத்த அனைத்து தபால்களுக்கும், தாமதமின்றி மனுதாரருக்கு பதில் அளிக்கப்பட்டது. மாவட்டப் பதிவாளர்களுக்கு பதில் அளிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் என குறிப்பிடும் அலுவலரிடம் விவரம் கோரப்பட்டது. மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பி அலுவலகத்தில் நேரிலும் விவரம் தெரிவிக்கப்பட்டது. விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து நிலைகளிலும் என்னால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் என கூறப்படும் அலுவலரால் வழங்கப்பட்ட தன்னிலை விளக்கமும் மனுதாரருக்கு பதிவு அஞ்சலில் அனுப்பியதில் முகவரியாளர் இல்லை என கடிதம் திரும்ப பெறப்பட்டுவிட்டது.

முகவரியாளர் மேற்படி முகவரியில் இல்லையென்ற சூழ்நிலையிலும், தகவல் ஆணையத்தால் மனுதாரரின் தொலைபேசி விவரம் அனுப்பிட கோரப்பட்டது. உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரரின் தொலைபேசி விவரம் பெற்று தகவல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எனவே என்னால் இயன்ற வரை தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வழக்கு முற்றிலும் பதில் பெறப்படவில்லை என கூறும் மனுதாரருக்கும், பதில் அனுப்பப்பட்டு விட்டது என கூறும் சம்பந்தப்பட்ட சார்பதிவாளருக்கும் உரியதாகும்.

மனுதாரரை ஒருமுறை நண்பகல் 12 மணியளவிலும், மற்றொருமுறை மாலை 5.30 மணியளவிலும் அலுவலகத்தில் நேரில் கூறிய விவரத்தையே மனுதாரரின் 05.11.2020 தேதிய கடிதத்திற்கு இவ்வலுவலக 18.11.2020 தேதிய கடிதத்தில் “சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அளித்த பதிலே தங்களுக்கு தகவலாக வழங்கப்பட்டது” என்ற விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மனுதாரருக்கு திருப்தி அளிக்கும் வகையில் மீள என்னால் பதில் விவரம் அளிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரரால் அளிக்கப்பட்ட வாக்கு மூல நகல், மனுதாரர் மேற்படி முகவரியில் இல்லை என திரும்ப பெறப்பட்டதற்கான ஆதாரம் ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உடல் நலக்குறைவின் காரணமாக சில ஆண்டுகளாக நான் தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்து வருவதாலும், எனக்கு முன் இரு சார்பதிவாளர்கள் பணியாற்றியுள்ள நிலையிலும், இக்கோப்பில் அனைத்து நிலைகளிலும் என்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கிலிருந்து தயவு கூர்ந்து என்னை விடுவிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

3. **மேற்கண்ட காரண விளக்கத்தை ஆணையம் பரிசீலனை செய்கையில், அதனை பதிவு செய்து, ஏற்கிறது. பொதுத் தகவல் அலுவலர் மீதான ஆணையத்தின் மேல்நடவடிக்கை கைவிடப்படுகிறது. எனவே, புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

ஒம்./-(**முகம்மது ஷகீல் அ.்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 942/SCIC/2020</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1. பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
மானாமதுரை
சிவகங்கை மாவட்டம் - 630 606.

2.திருமதி.சி.ஆதிலெட்சுமி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
மானாமதுரை.

**புகார்தாரர்**

திரு.வெ.ந.மணிவாசகம், த/பெ.நடராஜன்
44, வெள்ளாளர் தெரு
மானாமதுரை
சிவகங்கை மாவட்டம் - 630 606.

நகல்
பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 028.

RG/PC